**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 343/2022

**ம.சா1 அர்ச்சுணன்**

| | |
|---|---|
| Name | : **அர்ச்சுணன்** |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 18.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1.3.12.2021 ம் தேதியிட்ட குற்றாலம் காவல்நிலைய குற்ற எண். 479/21 ன் முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1

2. என்னுடைய விபத்து பதிவேடு ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2

3. டி.என். 76 ஏ.க்யூ.2346 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3

4. பார்வைமகசர் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. மாதிரிவரைபடம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5

6. ரூ.3,61,771/-க்குரிய மருத்துவ பில்கள் அசல் ம.சா.ஆ 6

7. என்னுடைய ஆதார் அடையாள அட்டை மற்றும் என் வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்திற்கு முன்பு நான் கொத்தனார் வேலை செய்து மாதம் ரூ.50 ஆயிரம் வருமானம் பெற்று வந்தேன். அவ்வாறு வருமானம் பெற்று வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கட்டிட வேலை நிரந்தரமான வேலை மற்றும் வருமானம் இல்லை என்றால் சரியல்ல.

நான் என் மனுவிற்காக வருமானத்தை மிகைப்படுத்தி சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. விபத்து அன்றுநான் ஒட்டிய வாகனம் எனக்கு சொந்தாமானது. இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கு ஒட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஒட்டிசென்ற வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எந்த நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. என் மனுவில் நான் ஒட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர், காப்பீடு நிறுவனத்தின் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல்துறையினர் என் மீதுகுற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. குற்ற வழக்கின் இறுதி தீர்ப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கு ஆவணம் என் வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மீதுள்ள குற்ற வழக்கை ரத்து செய்வதற்கு ஏதேனும் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. விபத்திற்கு என் அதிவேகம், கவனக்குறைவு மட்டம் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. நான் ஒட்டிசென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்தால் எனக்கு ஒட்டுனர் உரிமம் உள்ளதா இல்லையா என்பது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. ரூ.5 ஆயிரத்திற்கு மேல் மருத்துவ செலவு செய்திருந்தால் வருவாய் முத்திரைவில்லை ஒட்டி ரசீது வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற காலத்திற்கான மருத்துவ

பரிந்துரை சீட்டுக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளில் முன்பணம் கழித்து கொள்ளப்பட வேண்டும் என்றால் கழித்து கொள்ளலாம். ம.சா.ஆ 6 குறித்து மருத்துவமனை அதிகாரிகள் விசாரணை செய்தால் தான் எதற்காக செலவு செய்யப்பட்டது என்பது தெரியும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ 6 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு இல்லை என்றும், என் மீது தான் தவறு என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மது போதையில் இருந்தார் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் வாகனத்தை சரியாக ஓட்டிவராததால் தெரிந்தது. விபத்து சமயம் என் மீது மோதியதாக சொல்லப்படும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான ஓட்டுனர் உரிமம், தகுதிசான்று இல்லை என்றும், காப்பீ விதிமுறைகளை மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி(முழுபொ)
தென்காசி.